**NFTE - BSNL**

**தேசிய தொலைத் தொடர்பு ஊழியர் சம்மேளனம்**

**சென்னை தொலைபேசி**

# நமது டிசம்பர் 19 வேலைநிறுத்தமும் நாடகமாடும் நம்பூதிரியும்

அருமைத்தோழரே!!

பி.எஸ்.என்.எல். ஊழியருக்கு 01.01.2007 முதல் கிடைத்திருக்க வேண்டிய ஊதிய உயர்வு குறித்தோ – ஊதியஉயர்வு பேச்சுவார்த்தை துவங்குவதற்கு தாமதமாவதால் இடைக்கால நிவாரணம் பெற்று தருவது குறித்தோ சிறிதும் அக்கறையின்றி இரண்டாண்டுகால அங்கீகாரத்தை வீணாக கழித்துவிட்ட நம்பூதிரி இப்பொது அங்கீகார தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டதால் ஊழியர்களை ஏமாற்றிட நாடகமாடுகிறார். அதன் ஒரு பகுதியாகத்தான் திடிரென அவர் அறிவித்துள்ள நவம்பர் 24 ஆர்பாட்ட அறிவிப்பு.

NFTE - BSNL தனது கூட்டணி சங்கங்களுடன் ஒன்றிணைந்து இடைக்கால நிவாரணம் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக நவம்பர் 25–ல் நாடெங்கும் ஆர்ப்பாட்டம் நடத்தவும், டிசம்பர் 2–ல் தார்ணா நடத்திடவும் இறுதியாக டிசம்பர் 19ல் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்திடவும் ஏற்கனவே முடிவெடுத்து அறிவித்துவிட்டது. முறையான வேலைநிறுத்த அறிவிப்பும் நிர்வாகத்திற்கு அளிக்கப்பட்டுவிட்டது. எனவே திடிரென நம்பூதிரி நமக்கு ஒரு நாள் முன்னதாக தனது ஆர்ப்பாட்டத்தை அறிவித்திருப்பது ஊழியரை ஏமாற்ற அவர் நடத்தும் நாடகமே.

ஊதியமாற்றம் குறித்து நம்பூதிரிசங்கத்திற்கு உண்மையிலேயே அக்கறையிருந்திருந்தால் ஏன் அச்சங்கம் இதுகாறும் நிர்வாகத்தினை நிர்பந்திக்க எந்த இயக்கத்தையும் நடத்திடவில்லை?

மத்தியஅரசு ஊழியருக்கெல்லாம் சமீபத்தில் தான் ஆறாவது ஊதியக்குழுவின பரிந்துரைகள் அமுலாகப்பட்டன. இதன் பின்னர் நவம்பர் முதல் வாரத்தில் கொல்கத்தாவில் கூடிய எம்ப்ளாயீஸ் யூனியனின் தேசிய செயற்குழு கூட்டத்தில் கூட இதுபற்றி அச்சங்கத்தினர் கவலைப்பட்டதாக தெரியவில்லை. மாறாக அவர்களது கவனமெல்லாம் எதிர்வரும் நான்காவது அங்கீகார தேர்தலில் வெற்றிப்பெறுவது எவ்வாறு என்பதை குறித்துத்தான் இருந்தது. அதனால் தான் அவர்களது கொல்கத்தா செயற்குழு கூட்டத்தில் ஊதியமாற்றம் தாமதாவது குறித்தோ – இடைக்கால நிவாரணம் ரூ.5000 கோருவது குறித்தோ எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. எத்தகைய போராட்டத்திற்கும் நாள் குறிக்கவில்லை. ஆனால் NFTE - BSNL நவம்பர் 6, 7 தேதிகளில் ராய்ப்பூரில் கூட்டிய தேசிய செயற்குழு கூட்டம் ஊதியமாற்றம் விரைவாக நடக்கவும் இடைக்கால நிவாரணம் கிடைக்கவும் நிர்வாகத்தை நிர்பந்திக்க மூன்று கட்ட போராட்டங்களை தீர்மானித்தது.

இந்த சூழலில் தான் பி.எஸ்.என்.எல். உள்ளிட்ட மத்திய பொதுதுறை நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு பெரும் ஊதியஉயர்வினை மத்திய அரசு 20.11.2008ல் அறிவித்தது. இதனால் நமது ஊழியர்கள் ஏமாற்றமும் கோபமும் அடைந்ததில் வியப்பேதுமில்லை. இரண்டாண்டு காலமாக ஊதிய மாற்றம் கோர எதையும் செய்யாமல் கோட்டைவிட்டு விட்ட தனது சங்கத்தின் மீது தான் ஊழியரின் ஒட்டுமொத்த ஆத்திரமும் கோபமும் திரும்பும் என்பதால் நம்பூதிரி அதனை திசை திருப்பவே தனது ஆர்ப்பாட்ட நாடகத்தை அறிவித்துள்ளார். தேர்தல் ஆதாயத்திற்காக அவர் போடும் இது போன்ற நாடகங்கள் இனி நமது ஊழியரிடம் எடுபடப்போவதில்லை. நமது பி.எஸ்.என்.எல். தொழிலாளர் கூட்டணியின் வெற்றி உறுதியாகிவிட்ட ஒன்று.

## நவம்பர் 25 ஆர்ப்பாட்டம் (மதியம் 1.30 மணி)

| இடம் | பங்கேற்கும் தோழர்கள் |
|---|---|
| ஹெட்குவார்டர்ஸ்,47, அரண்மனைக்காரன் தெரு | சி.கே.எம், பி. ஆண்டியப்பன் |
| தலைமை பொது மேலாளர் அலுவலகம்,புரசைவாக்கம் | எஸ்.லிங்கமூர்த்தி, வி.ராதா கிருஷ்ணன் |
| மாம்பலம் இணைப்பகம் | பி.விஜயராகவன், கே.ஆறுமுகம் |
| கோடம்பாக்கம் இணைப்பகம் | எஸ். கிருஷ்ணமூர்த்தி, இளங்கோ சுப்பிரமணியன் |
| குரோம்பேட்டை இணைப்பகம் | வி.கே. கோபாலன், ஜி. கோதண்டன் |

## டிசம்பர் 2 தர்ணா

(காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை)

## பூக்கடை வளாகம்

பங்கேற்போர் :

தோழர்கள் **சி.கே.எம், எஸ்.லிங்கமூர்த்தி, எம்.ஜே.வினோத்குமார்**

மாநிலச் செயலாளர்கள்

**கோரிக்கைகள்:**

1. ஊதிய பேச்சுவார்த்தையை / உடனடியாக துவக்கு; இடைக்கால நிவாரணமாக ரூ.5000/– அனைத்து ஊழியருக்கும் 01.01.2007 முதல் வழங்கு
2. பாரபட்சமான பதவி உயர்வு கொள்கையை கைவிடு; அதிகாரிகளுக்கு வழங்கியது போல 5 ஆண்டுக்கு ஒரு முறை 5 பதவி உயர்வுகள் வழங்கு
3. பதவி உயர்வுகளில் SC / ST ஊழியருக்கு இடஒதுக்கீட்டை உறுதி செய்.
4. 'பே அனாமலி' யை தீர்த்து வை.
5. பங்கு விற்பனை கொள்கையினை கைவிடு.
6. பென்ஷனுக்கு எதிர்காலத்தில் ஆபத்து விளைவிக்கும் DOT–ன் 15.06.2006 உத்தரவு வாபஸ் பெறப்பட வேண்டும்.
7. BSNL நிறுவனத்திற்கு கட்டணமின்றி 3G 'ஸ்பெக்ட்ரம்' வழங்க வேண்டும்.
8. நஷ்டத்தில் மூழ்கிவிட்ட ITI நிறுவனத்தை BSNL உடன் இணைக்கக் கூடாது
9. அனைத்து பதிவு செய்யப்பட்ட தொழிற்ச்சங்களுக்கும் குறைந்த பட்ச தொழிற்சங்க உரிமை / சலுகைகளை வழங்கிட வேண்டும்.

---

தோழர்களே,

நமது தொழிலாளர் கூட்டணி அறிவித்துள்ள அனைத்து போராட்டங்களையும் வெற்றிகரமாக ஒன்றுப்பட்டு நடத்திட வேண்டும். நமது தோழர்கள் மிக அதிக அளவில் மூன்று கட்ட போராட்டங்களிலும் திரளவேண்டுமென அன்புடன் வேண்டுகிறேன்.

தோழமையுடன்

**(சி. கே. எம்)**

மாநிலச் செயலாளர்

**NFTE - BSNL**

22.11.2008

சென்னை – 23